பதினெண் சித்தர் மடம், பீடம், குருகுலம்.

காரனோடை, சென்னை-67.

பதினெண் சித்தர் மட வெளியீடு

இந்துவேதம் வழங்கும்

# அன்றாடப் பூசை மொழி

அருளாட்சி நாயகங்கள்



11-வது பதினெண் சித்தர் பீடாதிபதி

12-வது பதினெண் சித்தர் பீடாதிபதி

அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்

# இந்துமத வரலாற்றுப் பேருண்மைகள்

| | | |
|---|---|---|
| **பிறப்பிடம்** | : | 'இளமுறியா'க் கண்டம் (The Lost-Lemuria) எனும் கடலுள் மறைந்த 'குமரிக்கண்டம்' |
| **காலம்** | : | பதினெண்சித்தர்களால் அனாதிக் காலத்தில் அதாவது கி. மு. 43, 71, 101 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. |
| **மொழி** | : | தமிழ் மொழி |
| **வழிபாட்டு நிலையம்** | : | 108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சிவாலயங்கள். |
| **இந்துமத நூல்கள்** | : | 108 பூசை மொழிகள், 48 மூல நூல்கள். |
| **இந்துமதப் பயன்கள்** | : | தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கையும், வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச்செய்தல் |

இந்துமதம் என்பது முன்னோர் வழிபாடு; மூத்தோர் வழி நடத்தல்.

அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மத வாழ்வே.

அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.

★ ஆதாரம் : மூலப் பதினெண்சித்தர் பீடாதிபதி ஆதி சிவனாரின் குருபாரம்பரியம்.

வெளியீடுஎண் : 445 **காணிக்கை: ரூ. 3-50/-**

உரிமை வெளியீடு:- **பதினெண்சித்தர் மடம்,**
**காரனோடை,** சென்னை-67.

இந்தப் புத்தகத்தில் உள்ள மந்தர, மந்திர, மந்திறங்களை பதினெண்சித்தர் மடத்தின் முன் அனுமதியின்றி அச்சிட்டு வெளியிடுபவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

## பதினெண்சித்தர்களின்
# அருள் வழங்கு முறைகள்

மெய்யான இந்துமதம், கடலுள் மறைந்த இளமுறியாக் கண்டத்தில், மூலப் பதினெண்சித்தர்களாலும் பதினெட்டாம் படிக் கருப்புகளாலும் 43, 73, 092 ஆண்டுகளுக்கு முன் தமிழ்மொழியில் தோற்றுவிக்கப்பட்டது. இம்மதம் ஒவ்வொரு தனி மனிதரும் அருளை அநுபவப் பொருளாகப் பெறுவதற்காக வழங்கிய **'அருட்சினை மந்திறமும்'; 'காயந்திரி மந்தரமும்'; 'காயந்திரி மந்திரமும்'; 'கற்பூரச் சோதி வழிபாட்டு மந்தரமும்'** மீண்டும் மக்களுக்கு நினைவுபடுத்தி வழங்கப்படுவதோடு; பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தங்களின் அருள் வழங்கு திருவுலாவில் மக்களுக்கு எப்படி அருள் வழங்குகிறார்கள் என்ற முறையும், தமிழ்மொழியின் சிறப்பும், இந்துமதச் சிறப்பும் விளக்கப்படுகின்றன



சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார்
பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி

## தலைவனையறிந்து தன்னையறியப் பயன்படும்

# அருட்சினை மந்திறம்

" வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்
கோனாகி யான் எனதென்று அவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயே உனைவாழ்த்தி வணங்குகின்றேன்.
ஏனோவாகி இன்னல் பல்லாற்றானும் உழல்பவர்க்கு
நானாகிய அடியேன் நலம் வேண்டுகின்றேன்
தானாகவே தழல்தரு கொடுமைமிகு துயரமெல்லாம்
வீணாகி விலகியோடி ஒழியட்டும் "

*எந்த வழிபாட்டிலும் அருளுலகத்தாரிடமிருந்து அருளைப் பெறுவதற்காகக் கூறும் பூசை மொழியே இந்த " அருட்சினை மந்திறம் "*



ஞாலகுரு சித்தர் கருவூரார்
பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி

## தன்னையறிந்து தலைவனையறியப் பயன்படும்

# அருளூறு காயந்திரி மந்தரம்

*(சத்தி காயந்திரி மந்தரம்)*

" ஓம் பூர்வ புலன்கள் சுவையாகுக !
தத்துவ வித்துக்கள் அரணாகுக !
பாரின்கோ தேவர் வசிக்கும் தீ மகிழட்டும்
தீயே யோகப் பரஞ்சோதி யாகும் ! "

*ஒவ்வொருவரும் அன்றாடம் தனித்துப் பூசைகளில் 108 முறை ஓதி அருளைப் பெறும் காயந்திரி மந்தரம்.*

— வழங்கியது இ. ம. இயக்க இளைஞர் அணி



ஞானாச்சாரியார், குவலய குருபீடம்,
ஞாலகுரு சித்தர் கருவூரார்

## தலைவனுக்குள் தன்னை நிறுத்தித் திரமை (வலிமை) பெற்றிடுவதற்காகஓதும்

# அருளூறு காயந்திரி மந்திரம்

*[சத்தி காயந்திரி மந்திரம்]*

**“ ஓம் சத்தியே காத்தாயி அயனுய வித்தின் மகவே**
**வாலையே கன்னியே குமரியே நங்கையே தீயென மலர்ந்திடு**
**தீயே உன்னோடு தூர்த்திடு பிறச்சினையாவும்**
**தாயே என்னோடு உயிரினப் பயிரினக் காப்புவழங்கிடு ”**

*தனித்தும், பிறரோடு கலந்தும் அன்றாடம் பூசைகளில் 108 முறை ஓதி அருளுலகத் திரத்தை (வலிமையை) வளர்த்துக் கொள்ள உதவுவதே இந்தச் சத்தி காயந்திரி மந்திரம்.*

— வழங்குவது அ. வி. தி. செயல்வீரர் பேரணி



இந்துமதத் தந்தை அருளாட்சி நாயகம்
ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார்

## எல்லா வழிபாட்டு நிலையங்களிலும் வழிபடக்கூடிய எல்லா நிலையினரும் அருளைப் பெறுவதற்குரிய அருட்சினை மந்திறம்

# கற்பூரச் சோதி வழிபாட்டு மந்தரம்

**கற்பூரம் பாக்கு வெற்றிலை பழம் தேங்காய்**
**பக்குவமாய்ப் பண்ணிய பலகாரங்கள் பலவும்**
**படைத்தேன் ஏற்றிடுக ! ஏற்றிடுக ! ஏற்றிடுக !**
**அனைத்தையும் காத்திடுக ! காத்திடுக ! காத்திடுக !**
**அருள் செழித்திடுக ! செழித்திடுக ! செழித்திடுக !**
**எங்கும் நலம் விளைக ! நலம் விளைக ! நலம் விளைக !**
**நான்மறையே நான்முறையே நானெறியே நான்வேதமே**
**வாழ்க ! வாழ்க ! வாழ்க ! வாழ்க ! வாழ்க !**

யார் எங்கு எந்தப் பூசையைச் செய்தாலும் கற்பூரம் காட்டும்போது இந்த மந்தரத்தைச் சொல்லித்தான் கற்பூரத்தைக் காட்டவேண்டும்

கற்பூரச் சோதிக்குப் பதிலாக எரிகின்ற எண்ணெத் திரி, எரிகின்ற அகல்விளக்கு, எரிகின்ற தீச்சட்டி முதலியவற்றின் சுடரால் ஆரத்திக் காட்டும் போதும் இந்தச் சோதி வழிபாட்டு மந்தரத்தைத் தான் கூறவேண்டும்.

(எந்த சோதி வழிபாடாக இருந்தாலும்)

**குறிப்பு :-** குண்டலினியைச் சித்தி செய்யும் போது தங்களுடைய உடலின் அங்கங்கள், ஆவி, ஆன்மா, ஆருயிர், சொந்த பந்தங்கள் முதலிய வற்றைப் படையல் பொருளாக்கிச் செய்கின்ற வழி பாட்டிற்கும் இந்த சோதி வழிபாட்டு மந்தரத்தைத் தான் கூறவேண்டும். எனவேதான் குண்டலினி மட்டும் பதினெண்சித்தர் பீடாதிபதிகளால் மட்டும் தான் நேரடியாக வழங்க முடியும்.



## நூல் வரலாறு

கலியுகம் பிறந்து 1359 ஆண்டுகள் கழிந்த பிறகு இந்துமத இந்தியாவுக்குள் புகுந்த அன்னியர்களில்; கூட்டங்கூட்டமாக இங்கேயே வாழ்வதற்கு இடம் தேடித் தங்களுடைய ஆடு மாடுகளுடன் தோல் கோவணமும், குடுவையும், கோலும், குடுமியுமாக வந்திட்ட பிற மண்ணின-ரான பிருமணர் என்னும் வடஆரியரால்; பதினெண் சித்தர்களின் அண்டபேரண்டமாளும் அமுதத் தமிழ்மொழியும் இந்துமதமும் பாழ்பட்டிட்டன. அதனல், பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி-யாகப் பொறுப்பேற்ற குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரூர் அவர்கள் தமது அருளாட்சி காலத்தில் (கி. மு. 100 முதல் கி. பி. 150 வரை) 'இந்துமத வளவளர்ச்சி இயக்கம்' என்ற நிறுவனத்தை 'இந்துமத மறுமலர்ச்சி இயக்கம்' என்ருக்கி; அதன் கீழ் ஏற்கனவே இருந்த 48 வகையான நிறுவன நிர்வாகங்களேயும் உருவாக்கினர். இவற்றின் செயல்பாடுகளுக்காக குருபாரம்பரியங் களிலிருந்து தேர்ந்தெடுத்த அருளூறு வாசகங் களேப் 'பதினெண்சித்தர் பூசா விதி', 'பதினெண் சித்தர் பூசைமொழி', 'பதினெண்சித்தர் அருள்

வழங்குமுறைகள்', 'பதினெண்சித்தர் சித்திநெறி' ......என்று பல தனி நூல்களாக வெளியிட்டார். அவற்றிலிருந்து எடுத்துத் தொகுத்து, அன்றாடம் அனைவரும் பயன்படுத்துவதற்காக கி.பி. 1772இல் கண்டப்பக்கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் உ. இராமசாமி பிள்ளை அவர்களால் வெளியிடப் பட்டதே இந்த 'அருட்பணி விரிவாக்கத் திட்டச் செயல்நிலை விளக்கம்', 'அன்றாட பூசைமொழி'.

## அருளுலக ஆட்சி மொழி

பதினெண்சித்தர்கள் இந்துமதத்தைத் தங்களது தாய் மொழியும் அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியுமான அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில்தான் படைத்தார்கள். இதன் உயிராகப் பதின்மூன்று எழுத்துக்களும், உடலாகப் பதினெட்டு மெய்யெழுத்துக்களும் உள்ளன. இவற்றைப் பயன்படுத்தினால்தான் இந்துமதத்தின் உயிர்நிலைகளையும் மெய்நிலைகளை யும் அநுபவமாகப் பெற முடியும். இவற்றின் விளக்கமாகவே, கடந்த மூன்றுயுகங்களின் வரலாறும், இந்த யுகத்தின் வரலாறும் உள்ளன.



## காலக் கணக்கீட்டைக் கண்டு பிடித்தவர்கள் தமிழர்களே !

இம்மண்ணுலகம் தோன்றி ஐந்நூறு (500) கோடி ஆண்டுகளாகின்றது; ஆனால்; இதற்கு முன்னரே விண்வெளியில் உள்ள அண்டங்களி-லும், பேரண்டங்களிலும் (Universe) பதினெண் சித்தர்களால் தோற்றுவிக்கப்பட்ட இந்துமதம் இருந்து வருகின்றது.

இம்மண்ணுலகம் நெருப்பாக, பனியாக, நீராக முன்னூறு கோடியாண்டுகளும், கல் தோன்றி ஒரு நூறு கோடியாண்டுகளும் கழித்தே மண்ணும், உயிர் களும் (அருவங்களும்), பயிரினங்களும், உயிரினங்-களும் (உருவங்களும்) தோன்றின. மனித இனம் தோன்றி மூன்று உகங்கள் முடிந்து நான்காவது உகம் நடக்கின்றது.

1. கீரன் உகம் (கிரேதாயுகம்) 1728080 ஆண்டுகள்
2. தீரன் உகம் (திரேதாயுகம்) 1290000 ஆண்டுகள்
3. தூரன் உகம் (துவாபரயுகம்) ×64000 ஆண்டுகள்
4. கலியன் உகம் (கலியுகம்) 432000 ஆண்டுகள்

4314080 ஆண்டுகள்

ஆக மனிதன் பண்பட்ட நிலையில் இம்மண்ணுலகில் வாழும் காலமே இங்கு குறிப்பிடப் பட்டுள்ளது. ஆனால், மனிதன் பண்படுவதற்கு முன்னால் வந்த சித்தர்கள் அருளுலக ஊற்றுகளைக் கண்டுபிடித்து இந்துமத நெறிகளை வகுத்தனர். அப்போதே இந்துமதம் தோன்றியது. நாடோடியாக மனிதன் மணிசனுக வாழ்ந்த அந்தக் காலமே (4,85,920 ஆண்டுகள்) 'அனாதிக் காலம்' எனப்படும் அதையும் சேர்த்தே இந்துமதம் தோன்றி இன்றுவரை 43,73,093 ஆண்டுகள் (அனாதிகாலம் + மூன்று உகம் + கலிஉகம் = 4,85,920 + (17,28,080 + 12,90,000 + 8,64,000) + 5,093 = 43,73,093 ஆண்டுகள்) ஆகின்றன.

## தமிழர் மதமே இந்துமதம்

இந்த உலகில் மண் தோன்றுமுன் கற்பாறைகள் மட்டுமே தோன்றியிருந்த காலத்தில் பதினெண்சித்தர்கள் எண்ணற்றமுறை இங்கு வந்து தங்கி ஆய்வுகள் நிகழ்த்தி; இந்த உலகம் (48 இலட்சம்) நாற்பத்தெட்டு நூறாயிரம் ஆண்டுகள் கழிந்து அழியும் என்று முடிவு செய்தனர்.



மானுட இனம் அழிந்த பிறகு இந்த உலகம் இருண்டு முழுமையாகச் சிதைய ஐந்து நூறாயிரம் (ஐந்து இலட்சம்) ஆண்டுகள் ஆகிடும். எனவே, பதினெண்சித்தர்கள் இந்த உலக அருவங்கள், உருவங்கள், அருவுருவங்கள் அனைத்தும் உய்யும் பொருட்டு நாற்பத்தெட்டு எண்ணிக்கைகளைப் பெற்ற பல நிலைகளை உடைய இந்துமதத்தைத் தங்களின் தாய்மொழியான தமிழ்மொழியில் கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திலேயே படைக்க ஆரம்பித்திட்டார்கள்.

'இந்து' என்ற சொல்லை 'விந்து' 'உயிரணு', 'உயிரின கரு', 'உயிரின் ஆரம்பமும் முடிவும்', ஒளி, ஒலி, வலிமை, வளம், அழகு, இளமை, இனிமை' அன்பு, அமைதி, நிறைவு, நிம்மதி, ஒற்றுமை, உறவு, உரிமை, பற்று, பாசம், நேர்மை, வாய்மை, தூய்மை, மெய்மை, துய்ப்பு, பத்தி, சத்தி, சித்தி, முத்தி, நிலைப்பேறு, பிறப்பிறப்பற்ற பெருநிலை, தவம், ஞானம், ... எனும் நாற்பத்தெட்டு வகையான பொருளுணர்வைக் குறிக்கும் சொல்லாகவே படைத்தனர். எனவேதான், இந்துமதம் உலக மானுட இனத்தைப் பண்படுத்திடும் வழியாய்

வழிகாட்டியாய், வழித்துணையாய், வழிப்பயனாய் என்றென்றும் இருந்து வருகின்றது.

இந்த உலகை ஒன்பது கோள்களும், பன்னிரண்டு இராசிகளும், இருபத்தியேழு விண்மீன் களும் (நட்சத்திரங்களும்)ஆக நாற்பத்தெட்டு எனும் விண்ணுலகச் சத்திகளே ஆட்டிப்படைக்-கின்றன. இவற்றிலிருந்து தப்பிக்கப் பரிகாரப் பூசைகளை விளக்குவதே இந்துமதம்.

## தமிழ் மொழிச் சிறப்பு !

தனிமனிதர், குடும்பம், சமூகம், அரசு என்ற நான்குவகை நிலைகளுக்கும் தேவையான கருத்துக் களை 'வாக்கு', 'வாக்கியம்', 'வாசகம்' என்று மூன்று வகைகளாக 'இயல்', 'இசை', 'நாடகம்' என்ற முத்தமிழில் வழங்கியவர்களே பதினெண்சித்தர் கள்.

இந்துமதத்தைக் கருக்கல், குருக்கல், தருக்கல், திருக்கல் என்ற நான்கு நிலையினரே நாற்சுவர்க் கோட்டையாகக் காத்திடும் மரபு தோற்றுவிக்கப் பட்டது. இவர்கள் நான்மறைகள், நான்முறைகள், நானெறிகள், நான்வேதங்கள் என்ற நான்கு பிரிவு



கொண்ட நான்கு செயல்நிலைகளை வடிவமைப்புச் செய்தார்கள். இவற்றின் உயிர்நிலையாக 1. நேமம், 2. நியமம், 3. நிடதம், 4. நிட்டை என்ற நான்கும்; 1. சுருதி, .. ஆரணம், 3. ஆகமம், 4. மீமாம்சை என்ற நான்கும் படைக்கப்பட்டன. இவை துணை இணை (நேமம், துணை நேமம், இணை நேமம்) என்ற இரு பிரிவுகளோடு ஒவ்வொன்றும் மூன்று வகை-யான அமைப்பினைப் பெற்றன.

மனிதர்கள், மதத்தைச் செயலாக்கிட 1. பூசை (பூ+செய்) 2. தவம், 3 வேள்வி, 4. சித்தம் என்று நான்கு பெரும் பிரிவுகளாக்கினர்.

இதன்படி குருவழியாகப் 1. பயிற்சி, 2. முயற்சி, 3. தேர்ச்சி, 4. முதிர்ச்சி என்ற நான்கு நிலைகளைக் கடக்கும் பாடத்திட்டம் வகுக்கப் பட்டது. அதில் கல்வி கற்றவர்கள் 1. பத்தி, 2. சத்தி, 3. சித்தி, 4. முத்தி என்ற நான்கு வாழ்வியல் நிலைகளைப் பெறும் உறுதியும் வாய்ப்-பும் வசதியும் உருவாக்கப்பட்டன.

பதினெண்சித்தர்களும் பதினெட்டாம்படிக் கருப்புகளும் இந்துமதத்தைச் செயலாக்கிட 1.48 வகை சித்தர்கள், 2. 48 வகை கருப்புகள், 2. 48

வகை வழிபடு நிலையினர்கள், 4. 48 வகைக் கருவறை மூலவர்கள், 5. 48 வகை அருளாளர் கள், அருளாளிகள், அருளாடு நாயகங்கள், 6. 48 வகை மருளாளர்கள், மருளாளிகள், மருளாடு நாயகங்கள், 7. 48 வகை பதினெண்சித்தர் பீடாதிபதி வழி ஆச்சாரியார்கள், 8. 13 வகைக் கருவழி ஆச்சாரியார்கள், 9.13 வகைக் குருவழி ஆச்சாரியார்கள் என்று ஒன்பது வகை அருளுலக ஆட்சியாளர்களை உருவாக்கினார்கள்.

இந்துமதத்தின் உயிரோட்டமாக எண் வகை ஆச்சாரியார்கள் : 1 ஈசுவராச்சாரியார், 2. ஆதி ஈசுவராச்சாரியார், 3. சிவாச்சாரியார், 4. ஆதி சிவாச்சாரியார், 5. பரமாச்சாரியார், 6. ஆதி பரமாச்சாரியார், 7. சங்கராச்சாரியார், 8. ஆதி சங்கராச்சாரியார் உருவாக்கப்பட்டுள்ளனர்.

இவர்களெல்லாம் செயல்பட 'முத்தீ ஓம்பல்' என்ற 1. கந்தழி நிலை, 2. வள்ளி நிலை, 3. கொடி நிலை என்ற மூன்று வகை வழிபாடும், 'ஐந்தீ வேட்டல்' என்ற 1. ஓமம், 2 ஓகம், 3. யாகம், 4. யக்ஞம், 5. வேள்வி என்ற ஐந்து வகை வழி பாடும் படைத்தப்பட்டன.



கருவூரர் பரம்பரையினரின் அருளுலகப் படைப்பாற்றலுக்குரியவையாக இரவில் மட்டும் கூறப்படும் 1. தந்தரம், 2 தந்திரம், 3 தந்திறம், 4 தாந்தரம், 5 தாந்தரீகம் என்பனவும் ; காக-புசுண்டர் பரம்பரையினரின் அருளுலகக் காப்பாற்றலுக்கு [போற்றிப் பேணிப்பாதுகாத்து வளர்த்தல்] உரிய பகலில் மட்டும் கூறக்கூடிய 1. மந்தரம், 2. மந்திரம், 3. மந்திறம், 4. மாந்தரம், 5. மாந்தரீகம் என்பனவும்; இரு காலத்துக்கும் கூறக்கூடிய 1. எந்தரம், 2. எந்திரம், 3. எந்திறம், 4. ஏந்தரம், 5 ஏந்தரீகம் என்பனவும்; இந்துமதத்தில் படைக்கப்பட்டு 'இந்து மதம் ஓர் அண்டபேரண்டமாளும் மதம்' என்ற நிலையைப் பெற்றுள்ளது. மாறாத இளமை யும் குன்றாத சுவையும் அமுதப்பண்புமுடைய உயர் தனிச் செம்மொழியான தமிழ்மொழியே இந்த அண்ட பேரண்டமாளும் இந்து மதத்தின் ஆட்சி மொழி, அருள் மொழி, கடவுள் மொழி தெய்வ மொழி, தேவமொழி....ஆகும்.

பதினெண்சித்தர்கள் 1. ஒன்பது கடவுட் கலைகள், 2. ஒன்பது தெய்வீகக் கலைகள், 3. ஒன்பது பேய்க்கலைகள், 4. ஒன்பது நோய்க்கலைகள், 5. ஒன்பது தேய்கலைகள், 6. நாற்பத்தெட்டு அருட்-

கலைகள், 7. அறுபத்து நான்கு ஆய கலைகள்... என்று இந்து மதத்துக்காகப் பலவகைக் கலைகளைப் படைத்துள்ளார்கள் (Arts).

இவர்கள், அருளின் வெளிப்பாடுகளாக 1. அத்திரங்கள், 2. சாத்திரங்கள், 3. சூத்திரங்கள், 4. தோத்திரங்கள், 5. நேத்திரங்கள்......என்று இந்து மதத்துக்காகப் பலவகை அறிவியல்களை (Sciences) படைத்துள்ளார்கள்.

இவர்கள் எண்ணற்று உருவாக்கியுள்ள இந்து மதச்சட்ட திட்டக் கட்டுப்பாடுகள், 1. குருபாணி, 2. குருமார் ஒழுக்கம், 3. பூசாவிதி, 4. கருவறைப் படி, 5. பலிநூல், 6. மடநூல், 7. அடுக்களைச் சாத்திரம், 8. படையல் நூல், 9. கனநூல், 10. மணநூல், 11. மோகநூல், 12. தாகநூல், 13. வேகநூல், 14. போகநூல்...என்று பல உள்ளன.

## இந்து மதமே தமிழரை உய்விக்கும்

இப்படிப் பதினெண்சித்தர்கள் கணக்கற்ற கோடி ஆண்டுகளாக அண்ட பேரண்ட முழுதும் பரவியுள்ள இந்துமதத்தை மிகமிகத் தெளிவாக வரையறுத்து ஏட்டுலகச் செய்தியாகவும் (Theoritical Informations) நாட்டுலக நடைமுறை அநுபவ அறிவாகவும் (Practical Knowledge) தூய வாய்மைமிகு அமுதப் பைந்தமிழில் வழங்கியுள்ளார்கள். இப்பேருண்மைகளை உணரமுடியாத குருடர்களும், உணர மறுக்கும் திருடர்களும்; அன்னியர்களிடம் கைக்கூலி பெற்றுக் கொண்டு தமிழுக்கும், தமிழாக உள்ள இந்து மதத்துக்கும் துணிந்து துரோகிகளாகச் செயல்படுகிறார்கள். இவர்களைவிடப் போலிகளும் நாத்திகர்களும் நல்லவர்களே. எனவே, இந்துமத மூலவர்களாகவும் காவலர்களாகவும் உள்ள தமிழர்கள் பொறுப்போடும் பொறுமையோடும் சிந்தித்துத் தங்களை இந்துக்கள் என்று உணர்ந்தும் உணர்த்தியும் உரையாற்றியும் செயல்பட வேண்டும்.

தமிழ்ப் பண்பாடு, தமிழ் நாகரிகம், தமிழின ஒற்றுமை, தமிழின உரிமை, தமிழகப்பெருமை, தமிழர் தன்மானம், தமிழினமானம்...... முதலிய அனைத்தும்; தமிழ்ப் பாரம்பரியத்தையே வளர்க்கும், விளக்கும் இந்துமதத்தில்தான் உள்ளன என்ற பேருண்மையில்தான் அனைத்து விடிவுமுள்ளன.

ஒவ்வொரு தமிழனும் சாதி, மதம், அரசியல் கட்சி, பதவிவெறி, பண வெறி, புகழ்வெறி...... முதலிய அனைத்தையும் கடந்து தன்னைத் தமிழினத்-தான் என்று மட்டும் உணர்ந்து ஒன்று திரண்டு ஒற்றுமைப்பட்டால்தான் வருங்காலம் ஒளி நிறைந்ததாக இருக்கும். இந்த ஒற்றுமையை உருவாக்கும் அறிவியல் நிலையும் ஆற்றல் நிலையும் ஆர்வ நிலையும் தமிழ்மொழியில் உள்ள இந்து மதத்துக்குத்தான் உண்டு! உண்டு! உண்டு! என்று கூறி இவ்விளக்கத்தை நிறைவு செய்கிறோம்.

## இந்துமதத்தின் கட்டமைப்பு

இந்துமதத்தின் முதல் நிலையாக எட்டுவகை ஆச்சாரியார்களை இம் மண்ணுலகப் பயிரின உயிரின வாழ்வான (48) நாற்பத்தெட்டு இலட்சம் ஆண்டுகளில் தோன்றுவதற்குரிய செயல் திட்டத்தை ஏற்படுத்தினார்கள். இதன்படி ஒவ்வொரு வகை ஆச்சாரியார்களிலும் நாற்பத்தெட்டுப் பேர்கள் தோன்ற வேண்டும்.

1. சிவாச்சாரியார் 48 பேர் தோன்றிவிட்டார்கள்
2. ஆதிசிவாச்சாரியார்-48 பேர் தோன்றிவிட்டார்கள்



3. ஈசுவராச்சாரியார்-48 பேர் தோன்றிவிட்டார்கள்
4. ஆதிஈசுவராச்சாரியார்-48பேர் தோன்றிவிட்டார்கள்
5. பரமாச்சாரியார்-48 பேர் தோன்றிவிட்டார்கள்
6. ஆதிபரமாச்சாரியார்-48 பேர் தோன்றிவிட்டார்கள்
7. சங்கராச்சாரியார்-இதுவரை (40) நாற்பது பேர்கள்தான் தோன்றியுள்ளார்கள். இன்னும் (8) எட்டு சங்கராச்சாரியார்கள் தோன்ற வேண்டும்.
8. ஆதி சங்கராச்சாரியார்-இதுவரை (32) முப்பத்-திரண்டு பேர்கள் தான் தோன்றியுள்ளார்கள். இன்னும் (16) பதினாறு ஆதி சங்கராச்சாரியார்கள் தோன்ற வேண்டும்.

குறிப்பு:- இங்கு குறிக்கப்படும் காலடி ஆதி சங்கராச்சாரியார் கி.பி. 786க்கு மேல் 790க்குள் கருணீக்க சைவ வேளாள மரபில் தோன்றிய தென்பாண்டித் தமிழர். (அவரே தன்னைச் சௌந்தர்ய இலாகிரியில் திராவிட சிசு என்று குறிக்கிறார்).

இந்த எட்டுவகை ஆச்சாரியார்கள் தமிழினத்தில் மட்டும்தான் தோன்றுவர்-என்பதே பதினெண் சித்தர் வாக்கு.

இந்த இந்துமதத்துக்கு இரண்டாவது நிலையாக கருவழி ஆச்சாரியார்கள் என்று பதின்மூன்று பேர்கள் 1. அத்திரி, 2. இத்திரி, 3. உத்திரி, 4. எத்திரி, 5. ஐத்திரி, 6. ஒத்திரி, 7. காத்திரி, 8 சாத்திரி, 9. தாத்திரி, 10. பாத்திரி, 11. நாத்திரி, 12. மாத்திரி, 13. வாத்திரி உருவாக்கப்பட்டார்கள். இவர்கள் உலகெங்கும் சென்று தகுந்த அருள் நிலையுடைய பெண்டிரைத் தேர்ந்தெடுத்து மணந்து இனிய இல்லறம் நடத்திக் கருவழி வாரிசுகளை உருவாக்கினர்.

மூன்றாவது நிலையாகக் 'குருவழி ஆச்சாரியார்'கள் என்று பதின்மூன்று பேர்கள் 1. பத்தர், 2. பத்தியார், 3. போத்தர், 4. போத்தியார், 5. புத்தர், 6. புத்தியார், 7. முத்தர், 8. முத்தியார், 9. சீவன்முத்தர், 10. சீவன்முத்தியார், 11. அருவ சித்தியார், 12 உருவ சித்தியார், 13. அருவுருவ சித்தியார் உருவாக்கப்பட்டார்கள். இவர்கள் தங்களைக் குருவாக ஏற்றுப் பத்தி செய்பவர்களைச் சித்திபெறச் செய்து தங்களின் வாரிசுகளாக ஆக்கும் பணியை உலகெங்கும் செய்தார்கள்.

நான்காவது நிலையாகப் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றும் காலத்தில் அவர்களே



தேவைக்கேற்ப அருள் யோகமுடையவர்களைத் தேர்ந்தெடுத்துப் 'பதினெண்சித்தர் பீடாதிபதி வழி ஆச்சாரியார்கள்' என்று (48) நாற்பத்தெட்டு வகையினரைத் தோற்றுவிக்கும் வழிவகைகளை வகுத்தார்கள். இவர்கள் அல்லாச்சாரியார், ஆண்டவராச்சாரியார், இயவுளாச்சாரியார், இறைமையாச்சாரியார், தெய்வீகாச்சாரியார், கடவுளாச்சாரியார், தேவாச்சாரியார், பிறமாச்சாரியார்...என்று நாற்பத்தெட்டு வகைப்படும்.

## அருள் வழங்கு முறைகள்

தமிழகம் எங்கணும் இந்துமதத் தந்தை அருளாட்சி நாயகம் **ஞாலய குருபீடம் ஞாலகுரு சித்தர் கருவூரூரால்** ஞானமும் அருளும் வழங்கு திருவுலா நிகழ்ந்து வருகின்றது. கபாடபுரத்துக் கருவூரூரும், அமராவதியாற்றங்கரைக் கருவூரூரும்; 1. அனாதி மகாசத்தி, 2 ஆதி மகாசத்தி, 3. அனாதி பராசத்தி, 4. ஆதி பராசத்தி, 5. அனாதி சத்தி, 6. ஆதி சத்தி, 7. பராசத்தி,

8. மகா சத்தி, 9. சத்தி எனும் ஒன்பது வகை ஆத்தாள்களும்; எண் வகை ஆச்சாரியார்களும் இவ்வுலாவில் பங்கு கொண்டு வருகிறார்கள்.

பொது மக்களுக்கும், தனி மனிதர்க்கும், குடும்பங்களுக்கும், உலகத்தார்க்கும் நலம் விளைய வேண்டிக் கொள்ளும் வாய்ப்பு வழங்கப் படுகிறது. அருளூறு காயந்திரி மந்தரம், காயந்திரி மந்திரம், அருட்சினை மந்திறம், கற்பூர சோதி வழிபாட்டு மந்தரம் எனும் நான்கையும் குருவழி ஓதி அருளை அநுபவப் பொருளாகப் பெற்று அக இருளும் புற இருளும் அகலப் பெற்று அருட்பெருஞ்சோதியாகிட அனைவரும் வருக ! வருக ! வருக !.

அருள் வேண்டுபவர்களும், பொருளுலகத் தொல்லைகளுக்குப் பரிகாரங்கள் வேண்டுபவர் களும் ஞானச்சாரியார், இந்துமதத் தந்தை, அருளாட்சி நாயகம், குவலய குருபீடம், அண்ட பேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகி கருவூரார், குருதேவர் அவர்கள் வருகையின் போது, **குருபாரம்பரிய**



மரபுப்படி பூசைகளைச் செய்து அருளினைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொருவரும் எலுமிச்சம் பழம், விருப்ப மான மலர், திருநீறு, குங்குமம், மஞ்சள் (மஞ்சள் கிழங்கு [அ] மஞ்சள் தூள்) திருக்கலயம் (பூரணக் கும்பம்; ஏதேனும் ஒரு பாத்திரத்தில் மஞ்சள் நீர் [அ] ஆரத்தி நீர்கரைத்து வேப்பிலை, மாவிலை, அரச இலை, ஆல இலை வைத்து எடுத்து வரவேண்டும். வசதியுள்ளவர்கள் இந்தப் பூரண கும்பத்தில் தேங்காய் வைத்துப் பூச்சுற்றிக் கொண்டு வரலாம். குருபாரம்பரிய மரபுப்படி இதில் குறித்துள்ள நான்கு வகை இலைகளும் திருக்கலயத்தில் வைக்கப்பட்டாக வேண்டும்) முதலியவைகள் கொண்டுவந்து அருளேற்றிக் கொண்டு செல்லலாம் குருதேவர் நாளோலக்கத்-திலும் திருவோலக்கத்திலும் இருந்து அருளூறு பூசனைப் பொருட்களை வழங்குவதால் இவை 48 நாட்களுக்குத் தொடர்ந்து பூசை செய்யப்பட்டு பயன் படுத்தப்படல் வேண்டும்

அனாதிக் காலத்தில் பதினெண்சித்தர்களும் பதினெட்டாம்படிக் கருப்புகளும், தாத்தாக்களும்,

ஆத்தாக்களும், அம்மையப்பன்களும், மற்ற விண்வெளியினர்களும் தொடர் முயற்சிகளைச் செய்து இம்மண்ணுலகம் முழுவதும் உள்ள அருளூற்றுக்களைக் கண்டுபிடித்து 48 வகையான வழிபாட்டு நிலையங்களை உண்டாக்கினார்கள். இவற்றிற்கு இணையாகவும் துணையாகவும் தேவைக்கேற்ப பலவகை வழிபாட்டு நிலையங்களையும் உண்டாக்கினார்கள். எனவேதான் குருபாரம்பரியத்தில், வழிபாட்டு நிலையங்கள் 48 வகை, 96 வகை, 108 வகை என்று குறிக்கும் மரபுகள் பிறந்தன. இவற்றுள் 1. அமளிகை, 2 அம்பலம், 3. அரங்கம், 4. ஆலயம், 5. இருக்கை, 6. ஈச்சுரம், 7. உண்டாட்டம், 8. ஏட்டகம், 9. கந்தழி, 10. களத்துமேடு, 11. கற்றளி, 12. குடிசைக்கோயில், 13. கொடிநிலை, 14. கோட்டம், 15. கோயில், 16. சபை, 17. சத்திறம் (சத்தி திறம்), 18. சன்னிதானம், 19. சமாது, 20. சாவடி, 21. சோலை, 22. தளி, 23. தவச்சாலை, 24. தானம், 25 திராவிடம், 26. திருப்பதி, 27. திருவடி, 28. திருவோலக்கம், 29. தூங்கானைமடம், 30. நகரம், 31. நாகரம், 32. நியமம், 33 பள்ளி, 34. பலிபீடம், 35. பாழி, 36. பீடம், 37. புற்று, 38. பூங்கோயில், 39. பொதியில், 40 ஞானக்கொட்டடி, 41. மன்றம், 42. மந்தை,



43. மடம், 44. மண்தளி, 45. விண்ணகரம், 46. விரிச்சிமேடை, 47. வெறியாட்டமேடை, 48. வேசரம், 49. வேள்விக்கூடம்... இவை குறிப்பிடத்தக்கவை. இந்த அருளூற்றுக்களின் பாய்ச்சலால்தான் உயிரற்றவைகளும், உயிருள்ள உயிரினங்களும், பயிரினங்களும் செழிப்பானவாழ்வைப் பெற்று வருகின்றன. இம்மண்ணுலகம் முழுவதிலும் இவற்றில் சாதிவேறுபாடோ, இனவேறுபாடோ, ஏழை பணக்காரர் என்ற உயர்வு தாழ்வோ, நாட்டு வேறுபாடோ கிடையாது! கிடையாது! கிடையாது! கிடையவே கிடையாது!.

மண்ணுக்கேற்ற பயிர்வகைகள் பயிரிட்டால்தான் சிறந்த விளைச்சல் கிடைக்கும் என்பது போல் மனிதர்களின் ஊழ்வினை, விதி, பிறப்பியல், யோகம், ஆள்வினை, பயிற்சி, ஆர்வம்,......முதலியவைகளுக்கேற்பத் தான் மேற்குறித்த 48 வகையான வழிபாட்டு நிலையங்களின் அருள் வகைகளில் பொருத்தமான அருள் நிலை தேர்ந்தெடுக்கப்பட்டு குருவாக இருப்பவர்களால் வழங்கப்படுகிறது. இப்பேருண்மையினைப் புரிந்து குருவழி ஒழுகி அருட்பயன்களைப் பெறுமாறு பன்னிரண்டாவது பதினெண்

சித்தர் பீடாதிபதி குருதேவர் அறிவிப்பு வழங்குகிறார்.

அருளாளர்களுக்கிடையிலோ (அ) பத்தர்களுக்கிடையிலோ வழிபாட்டு நிலையத்தின் பெயராலோ, வழி காட்டும் குருமார்களின் பெயராலோ, ஏற்று வாழும் மதத்தின் பெயராலோ, போட்டி பொருமைகளோ, வேற்றுமை உணர்வுகளோ வளரவே கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது. அதாவது அனைத்து மதங்களும், அருளாளர்களும், வழிபாட்டு நிலையங்களும் அருட் சத்தியால் அக இருள்களையும், புற இருள்களையும், நோய் நிலைகளையும், பேய் நிலைகளையும், தேய் நிலைகளையும் அகற்றிடும் அருட்பணி விரிவாக்கத் திட்டம் தான் அனாதி காலத்திலேயே சித்தர்நெறி என்கின்ற இந்து மதமாகப் பிறப்பெடுத்தது. அந்த இந்து மதத்தின் மூலவர்களான பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் வாரிசாக தோன்றியுள்ள 12-வது பதினெண்சித்தர் பீடாதிபதியின்மூலம் அருளூற்றுக்களான வழிபாட்டு நிலையங்களையும், வழிபாட்டு முறைகளையும், தனி மனிதர்களையும் புதுப்பித்துக் கொள்ளுங்கள் (அ)புத்துயிர்ப்புச் செய்து கொள்ளுங்கள், தேவையான



பத்தி முறைகள், சத்தி முறைகள், சித்தி முறைகள், முத்தி முறைகள், அருளூறச் செய்யும் ஏந்தரீக, தாந்தரீக, மாந்தரீக நெறிகள்; இட்டும், தொட்டும், சுட்டியும் அருளூறப் பெற்றுக்கொள்ளும் முறைகள்; ஓதியும், உருப்போட்டும்,மோன மொழியில் பேசியும், ஞான தவத்தில் முனகியும் அருளூறப் பெற்றுக் கொள்ளும் வேதங்கள் முதலிய அரிய அருட்செல்வங்களைப் பெற வாரீர்! வாரீர்!! வாரீர்!!!.

வெளியீடு

இந்து மறுமலர்ச்சி இயக்கம்
அருட்பணி விரிவாக்கத் திட்டம்
கடவுளை வழிபடுவோர் கழகம்
12 - 4 - 92 இந்து முன்னேற்ற கழகம்

மந்திரமும் மருந்தும் மனிதனின்
கண்கள்!

இந்து மதம் ஒன்றுதான் பெண்ணை
தெய்வமாகவே வழிபடும் மரபை
பெற்றிருக்கின்றது!

சமய மறுமலர்ச்சியே சமுதாய
மறுமலர்ச்சி!

இந்துமதம் ஒரு சமூக விஞ்ஞானம்!

**செய்முறை :**

(i) உடை: கட்டாயமாக இடுப்பில் கட்டும் வேட்டி முழங்காலுக்குமேல் இருக்கும் வண்ணம் சுருக்கியோ மடித்தோ வைத்துக் கொள்ளப்பட வேண்டும். இடுப்பிற்கு மேல் எந்த துணியும் இருக்கக்கூடாது. பெண்கள் முழுமையான ஆடையுடன் ஓதலாம். ஈரத் துணியாக இருந்தால் அதற்கென தனிப் பயன் உண்டு

(ii) மெய்ச்சுத்தம்: நீராடி முடித்தவுடன் செய்தல் மிகச் சிறந்தது; அல்லது முகம், கை கால்களைக் கழுவிய பின் ஆரம்பிக்க வேண்டும்.

(iii) அணிகலன்: உருத்திராக்கம், மணிமாலை, மந்திரித்த முடிச்சுகள் போட்ட கயிறு, தாயத்து, வில்லை... ஏதேனும் ஒன்றையாவது கழுத்தில் அணிந்திருக்க வேண்டும். பூசை நேரத்தில் மட்டு-மாவது திருநீறு, குங்குமம், சாந்து, சந்தனம், மை திருமண் எனும் ஆறில் ஏதேனும் ஒன்றையாவது நெற்றி, கழுத்து, மார்பு, இரு கைகள் ஆகிய இடங்களில் அணிந்திருக்க வேண்டும்.

(iv) இருக்கை நிலை: சம்மணமிட்டு அமர்தல், குத்த வைத்து அமர்தல், நாற்காலியில் அமர்ந்து கால்களைத் தொங்க விட்டுள்ள நிலை, நின்ற நிலை என நான்கு நிலைகளில் கூறலாம்.

## கடவுள்கள் பற்றி சில இந்துவேத வாசகங்கள்

1. கடவுள்களைப் பற்றிய நுட்பமான செய்திகளை திட்ட வட்டமாக **'இந்து வேதம் தான்'** வரையறுத்துக் கூறுகிறது.

2. கடவுள்களில் ஆண் நிலை, பெண் நிலை, இரண்டும் கலந்த நிலை என்ற மூன்று வகைகள் கணக்கிடப் பட்டுள்ளன.

3. "முன்னோர்களை வழிபடுவதும், மூத்தோர்களை பணிந்து ஏற்றுப் போற்றி வாழ்வதும் தான் மதவாழ்வு" என்று கூறும் ஒரே வேதம் இந்துமத வேதம்.

4. "ஒரு குறிப்பிட்ட நாட்டுக்குரிய கடவுள் வேற்று நாட்டுக்கு செல்லாது; ஒரு குறிப்பிட்ட மொழிக்குரிய கடவுள்கள் வேற்று மொழிகளைத் தெரிந்திருக்க மாட்டார்கள்" என்று கூறும் ஒரே வேதம் இந்து வேதம்.

5. "கடவுள்களுக்கும் நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப் பற்று உண்டு" என்று கூறும் வேதம் இந்து வேதம்.

6. "எம்மதமும் சம்மதம் என்று கூறுவது செயலுக்கு வராத கற்பனையான பொய்யான, மோசமான, .. கருத்து; அதே சமயத்தில் எல்லா மதங்களும் ஒற்றுமையாக இருக்க வேண்டும்" என்று கூறும் வேதம் இந்து வேதம்.

முழுக்க முழுக்க இந்துவேதத்தைக் கற்கவும், இந்துமதத்தின் கலைகளைப் பயிலவும், அருட்பணி ஆற்றவும் மக்களைத் தயாரிக்க இந்து மறுமலர்ச்சி இயக்கம் (இ. ம. இ. - I. M. I.,) பாடுபடுகிறது.

இந்துவேதவழி இந்துவேத வாழ்வியல் நடைமுறைகளைச் செம்மைப்படுத்திச் சமுதாய மறுமலர்ச்சியையும், அருளாட்சியையும் அமைத்திட இந்து முன்னேற்ற சழகம் (இ. மு. க- I. M. K.) பாடுபடுகிறது.

இவற்றில் உறுப்பினராகவும், ஆங்காங்கே கிளைகள் அமைக்கவும் தொடர்பு கொள்க.

3, N.G.O. நகர்,
பொன்னேரி-601 204.

ஞானச்சாரியார்,
வரதராசபுரம்,
அம்பத்தூர்,
சென்னை - 53.
தொலைபேசி : 654 447

# பதினெண்சித்தர் திருச்சபை அறக்கட்டளையின்
## செயல் திட்டங்கள்

பதினெண் சித்தர்களின் இலக்கியங்களை அச்சிடல்; இந்துவேத பாடசாலைகளை நாடெங்கும் நடத்துதல்; சித்த மருத்துவ முறைகளை ஆராய்தல்; அருட்கலைகளைப் பயிற்றுவித்தல்; தவம், பூசை, ஞானம், வேள்வி, குண்டலினி ஓகமுறை, யோகமுறை, ஓகாசனப் பயிற்சி முறை, யோகாசனப் பயிற்சிமுறை, சேவலோன் போர்க் கலைகள்,... முதலியவைகளை மீண்டும் புத்துயிர்ப்புச் செய்தல்; கற்பித்தல்; சித்தர்நெறிச் சூழலில் அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் (பாலுகர்) பாலகர்பள்ளி, இளம்பிள்ளை பள்ளி, வாலிபர் கல்விச் சாலை, .. முதலியவைகளை மீண்டும் தோற்றுவித்தல்; அனாதை இல்லம், முதியோர் காப்பகம், இலவச மருத்துவமனை... முதலியவைகளை நடத்துதல்

---

அரசாங்க ஒப்புதல் பெற்ற இந்நிறுவனத்திற்கு நன்கொடை வழங்குவோருக்கு வருமானவரிச் சலுகை (80 G) 1961-ன் கீழ் வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி :

நிர்வாக அறங்காவலர்,
**பதினெண் சித்தர் திருச்சபை,**
13, குமாரசாமி முதலி தெரு, வரதராசபுரம்,
அம்பத்தூர், சென்னை - 53.
தொலைபேசி : 65 44 47

# தொடர்பு முகவரிகள் :

இ. மு. க. பாரம்பரியத் தலைவர்
அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார்,
வரதராசபுரம், அம்பத்தூர், சென்னை - 53.
தொலைபேசி : 654447

இ. மு. க. அவைத்தலைவர், முதல் விசயாலய சோழன்,
பஃறுளி கம்ப்யூட்டர்சு, 12, சலைவான் தெரு,
சாந்தோம், சென்னை - 4. தொலைபேசி : 74359

பதினெண்சித்தர் மடம், பீடம், கருகுலம்,
G. N. T. சாலை, காரனோடை, சென்னை - 600 067.

இ. மு. க. பொதுச்செயலாளர்
கு. இரவிமணி B. Sc., B. Tech.
3, சிவாசிநகர், மேம்பாலம், தஞ்சாவூர்.

இந்து வேதம் பரப்பும் நாயகம்
த. கேசவன்
உரக்கடை, 266, கீழவெளிவீதி, மதுரை - 625 001.

இ. மு. க. சேலம் மாவட்ட தலைவர்
இரா. கங்காதரக்குமார் தொலைபேசி : 2194,
17, கவரைத் தெரு, இராசிபுரம், சேலம் மாவட்டம்.

இ. மு. க. கோவை மாவட்டத்தலைவர்
இரா. ராமசாமி
6/447 திருவள்ளு[illegible] நகர்,
சிறுமுகை - 641302 கோவை மாவட்டம்.

# அருள் வழங்கல்

பதினெண்சித்தர்களின் முறைப்படி அருளை அநுபவப் பொருளாக்கி பாதிப்புள்ளவர்களுக்கு மருந்தாகவும் பாதிப்பற்றவர்களுக்கு விருந்தாகவும் வழங்கும் பணி செவ்வாய், வெள்ளி மாலை நேரங்களிலும் ஞாயிறு பகலிலும் நிகழுகின்றன. நாள், கோள், மீன் இராசி பாதிப்புக்களுக்கும் (கிரகப்பாதிப்புக்களுக்கும்),மற்ற மந்திரவாதிப் பாதிப்புக்களுக்கும் நலம் வழங்கப்படுகிறது. வீடு, தொழிற் கூடம், கோயில் முதலியவைகளுக்குத் தேவையான சக்கரங்கள், இயந்தர இயந்திர இயந்திறங்களும் எந்தர எந்திர எந்திறங்களும் வழங்கப்படுகின்றன.

தனிமனிதர் பூசை செய்ய கற்றுக் கொடுக்கப்படுகிறது. பிறருக்கு அருள் வழங்கி நலம் விளைவித்துப் பாதுகாப்பு வழங்கிட மந்திரிக்க கற்றுக் கொடுக்கப்படுகிறது.

இந்து வேத பாடசாலை நிகழ்த்தப்படுகிறது.



ஞானச்சாரியார்,
இந்து மதத் தந்தை,
இந்து வேத நாயகம்,
இந்து வேத பீடம்,
குருமகா சன்னிதானம்,
இந்து மதத் தலைமை ஆச்சாரிய மடம்
பதினெண் சித்தர் மடம்,
காரனோடை, சென்னை-67.